# ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய சமூகம் மற்றும் சமூக பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடையில் வீதி நுழைவினை மேம்படுத்தும் செயலாற்றல் அறிக்கை



**RAH/A/PA/2019/25**

## உள்ளடக்கம்


1. நிறைவேற்றுப் பொழிப்புரை ..... 2
2. அறிமுகம் ..... 4
2.1 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தினை ஆரம்பித்தல் ..... 4
2.2 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல் ..... 5
2.3 ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் உடன்படிக்கை ஏற்படுத்தல் ..... 7
2.4 கணக்காய்வினைத் தெரிவு செய்வதற்கான காரணம் ..... 7
2.5 கணக்காய்விற்கான அதிகாரபலம் ..... 8
2.6 கணக்காய்வு விடயப் பரப்பு ..... 8
2.7 விடயப் பரப்பு மட்டுப்படுத்தப்படல் ..... 8
2.8 கணக்காய்வு நடைமுறைகள் ..... 9
2.9 கணக்காய்வின் உப நோக்கங்கள் ..... 9
2.10 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள் ..... 10
3. கணக்காய்வு அவதானிப்புகள் ..... 10
3.1 நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடல் ..... 10
3.1.1. வீதி நிகழ்ச்சித் திட்டத்தினை இனங்காணல் (வேலைத் திட்டத்தின் விடயப் பரப்பினை மாற்றுதல்) ..... 10
3.1.2. செயல்நடவடிக்கைத் திட்டம் ..... 11
3.2 செயற்திட்டத்தினை அமுலாக்கல் ..... 11
3.2.1. வீதிகளைத் தெரிவு செய்தல் ..... 11
3.2.2. ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்தல் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடல் ..... 14
3.2.3. ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் திரவத்தன்மை பிரச்சினைகள் ..... 17
3.2.4. ஒப்பந்தப் பொதிகள் கைவிடப்படல் ..... 18
3.2.5. மந்தகதியில் செயற்படும் ஒப்பந்தப் பொதிகள் ..... 21
3.2.6. வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் பொதிகள் ..... 22
3.2.7. நிர்மாணங்களின் தரம் தொடர்பான சிக்கல்கள் ..... 22
3.3 வீதி வேலைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம் ..... 25
3.3.1 நிதி செயன்முன்னேற்றம் ..... 25
3.3.2 பௌதிக முன்னேற்றம் ..... 26
3.3.3 இலங்கையின் முழு வீதி கட்டமைப்பினுள் இந்த வீதி வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட வீதிகள் ..... 26
3.3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் ..... 27
3.3.5 சமூகப் பொருளாதார பெறுபேறுகள் ..... 31
3.4 பரிந்துரை ..... 38

## 1. நிறைவேற்றுப் பொழிப்புரை

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கடன் ஒப்பந்தத்திற்கு அமைய முன்னாள் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, தற்போதைய வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சானது செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவர் நிலையமாக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்றிட்டதினைச் செயற்படுத்தும் முகவர் ஆகும். இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமானது கிராமிய சமூகம் மற்றும் சமூகப் பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடையிலான வீதி அணுகல்களை மேம்படுத்துவதாகும். இதன் நீண்டகால தாக்கமானது தேசிய மற்றும் மாகாண வீதிகளின் வினைத்திறனை மேம்படுத்துவதாகும். கடன் ஒப்பந்தத்திற்கமைய, வேலைத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 906 மில்லியன் அமெரிக்க டொலரிற்கு சமனான ரூபா 117,780 மில்லியனாக உள்ளதுடன் அதில் அமெரிக்க டொலர் 800 மில்லியனுக்கு சமனான ரூபா 104,000 மில்லியனை 6 நிதி வசதிகளின் கீழ் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டிருந்தது. அதில் முதல் 4 பகுதிகளின் கீழ் ரூபா 75,195 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி வழங்குவதற்கு வேறான 4 கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு கிடைக்கப் பெற்ற தொகையில் ரூபா 61,533 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கிராமிய வீதி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயல்களின் செயலாற்றல் மதிப்பீடு செய்தல் இந்தக் கணக்காய்வின் நோக்கமாகும்.

2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான செயற்றிட்ட ஆலோசகரால் வழங்கப்பட்ட பௌதீக முன்னேற்ற அறிக்கை மற்றும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கடந்த கால தளப் பரீட்சிப்புக்களில் செயற்றிட்டத்தின் பௌதீக முன்னேற்றமானது எதிர்பார்க்கப்பட்ட இலக்கினைக் குறித்த தினத்தில் எட்டியிருக்காதமை அவதானிக்கப்பட்ட காரணத்தால் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் செயற்படும் மொத்தம் 42 ஒப்பந்த பொதிகளில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டியிருக்காத 8 ஒப்பந்தத் பொதிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் முன்னேற்றங்கள் ஆழமாகப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, வடமேல் மாகாணத்தில் குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பரந்துள்ள வீதிகள் மட்டும் பௌதீகப் பரீட்சிப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் தெற்கு, மத்திய, சப்பிரகமுவ, வடமத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டங்களில் 3,143 கிலோ மீற்றர் நீளமான கிராமிய வீதிகளை புனரமைப்பதற்காக வழங்கப்பட்ட 42 ஒப்பந்தப் பொதிகளில் 25 ஒப்பந்த பொதிகள் அதாவது, வடமேல் மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் KU01, KU02 பொதிகள், மத்திய மாகாணத்தில் கண்டி

மாவட்டத்தில் அனைத்துப் பொதிகளும் மாத்தளை மாவட்டத்தில் MA02, MA03 பொதிகளும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் NE02 பொதியும் மட்டுமே புனரமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, தென் மாகணத்தில் மாத்தறை மாவட்டத்தில் M01, M02 மற்றும் M03 பொதிகள், காலி மாவட்டத்தில் G2, G3 பொதிகள், அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய H1, H2, H3 பொதிகள் என்பன 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதியில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும், வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் AP01, AP02, AP03, AP04 மற்றும் பொலனறுவை மாவட்டத்தில் PO1, PO2, PO3 மற்றும் களுத்துறை மாவட்டத்தில் KL01 பொதிகள் என்பன 2019 நவம்பர் 04 ஆம் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் R3 பொதியின் பணிகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

மேலும் மேற்கூறிய கிராமிய வீதிகளை புனரமைப்பு செய்வதற்கு வழங்கப்பட்ட 42 ஒப்பந்தப் பொதிகளில் 12 பொதிகள் அதாவது குருணாகல் மாவட்டத்தில் 3 பொதிகளும் (KU03, KU04, KU05) மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 2 பொதிகள் (PU2, PU3) மற்றும் மாத்தளை மாவட்டத்தில் MA1 பொதியும் காலி மாவட்டத்தில் G1 பொதியும் கேகாலை மாவட்டத்தில் KE1 பொதியும் இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு பொதிகள் (R1, R2) மற்றும் களுத்துறை மாவட்டத்தில் இரு பொதிகள் (KL2, KL3) என்பவற்றின் வீதி புனரமைப்பு நடவடிக்கைகள் ஒப்பந்தகாரர்களால் கைவிடப்பட்டிருந்தன.

அவ்வாறே, 05 ஒப்பந்த பொதிகளில் அதாவது புத்தளம் மாவட்டத்தின் PU1 பொதி நுவரெலியா மாவட்டத்தின் NE01, NE03 பொதி கேகாலை மாவட்டத்தின் KE2, KE3 பொதி என்பவற்றின் வீதி புனரமைப்பு பணிகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மந்தகதியில் இடம்பெற்று வந்துள்ளது. மேலும், மேற்கூறிய 12 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய ஒப்பந்ததாரர்களினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,577 மில்லியன் செயலாற்றல் பிணையை 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மீள அறவிடுவதற்கு செயற்றிட்டம் தவறியிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீதிகளை புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு அந்த பணியை கைவிட்ட 12 ஒப்பந்தகாரர்களுக்கு வேலையினை ஆரம்பிப்பதற்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 3,434 மில்லியன் தொகையில் 2019 நவம்பர் 30 ஆம் திகதியில் ரூபா 2,994 மில்லியன் தொகையினை அறவிடுவதற்குத் தவறியிருந்தது.

இவ்வாறு இடை நடுவே வேலை நிறுத்தப்பட்ட ஒப்பந்த பொதிகளின் பணிகள் நிறுத்தப்பட்டதன் பின்னர் அந்த பொதிகளுக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றிய தொழில் வழங்குநர் மற்றும் பொறியியலாளர்களின் (Consultant) பதவியணி பராமரிப்பிற்காக வேதனம் மற்றும் கொடுப்பனவு, வீடு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் வாகன வசதிகளுக்காக இடைக்காலக் கொடுப்பனவு இலக்கம் 39 மூலம் 2019

ஓகஸ்ட் மாதம் வரையிலும் மட்டும் ரூபா 23 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அந்தக் கொடுப்பனவிற்காக மாறுபாட்டுக் கட்டளையாக (Variation orders) ஒப்பந்த தொகுப்பு இலக்கம் KU01, KU02 மற்றும் PU01 என்பன பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2. அறிமுகம்

### 2.1 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தினை ஆரம்பித்தல்

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டம் 2014 ஜூலை 02 ஆம் திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் மொத்த முதலீடு ஐக்கிய அமெரிக்க டொலர 906 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் 800 மில்லியன் தொகையானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியாகவும், மீதி ஐக்கிய அமெரிக்க டொலர் 106 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடத் திட்டமிடப்பட்டிருந்தது. மேற்கூறிய அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய, மக்கள் தொகை மற்றும் அபிவிருத்தித் தேவைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் கிராமிய கேந்திர நிலையங்களாக ஆயிரம் கிராமங்களைத் தேர்வு செய்வதை எதிர்பார்ப்பாகக் கொண்டிருந்ததுடன் அந்தக் கிராமங்களுக்கு நுழையும் பிரதேச, மாகாண மற்றும் தேசிய வீதிகளை மேம்படுத்தல் அல்லது புனரமைப்பு செய்தல் என்பன அந்த வேலைத் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த முதலீட்டுத் திட்டத்தின் கீழ் 05 செயற்றிட்டங்களின் ஊடாக தெற்கு, சப்பிரகமுவ, மத்திய, வடமத்திய மாகாணங்களில் மற்றும் மேல்மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்திற்காக கிராமிய வீதி 2,200 கிலோ மீற்றர் மற்றும் தேசிய வீதி 400 கிலோ மீற்றர் என்பவற்றை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேம்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட வீதிகள் அனைத்து காலநிலைகளையும் தாங்கக் கூடிய வகையில் மேம்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தேசிய வீதிகள் மேம்படுத்தப்பட்டு செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்படும் வரையில் அதிகபட்சமாக 5 வருடங்கள் வரையிலும், கிராமிய வீதிகள் மேம்படுத்தப்பட்டு 3 வருடங்கள் வரையிலும் இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் பராமரிப்பு செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிறுவனமான அப்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் கடற்படை அமைச்சு, தற்போதைய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி முகவர் நிறுவனம் மற்றும் மாகாண சபை நிறுவனங்களின் வீதி சொத்துக்கள் முகாமைத்துவம், செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் ஆகிய பிரிவுகளில் காணப்படும் கொள்ளளவினை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு முதலீட்டு வேலைத் திட்டம் மூலம் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 800 மில்லியன் கடன் உதவித் தொகையானது பல கட்டங்களாக நிதியிடல்

வசதிகளின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த நிதி வசதிகள் 06 கட்டங்களில் செயற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய,

- முதலாம் கட்டம் 2014 ஒக்டோபர் மாதம் ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியனில்
- இரண்டாம் கட்டம் 2014 திசெம்பர் மாதம் ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியனில்
- மூன்றாம் கட்டம் 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 200 மில்லியனில்
- நான்காம் கட்டம் 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியனில்
- ஐந்தாம் கட்டம் 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியனில்
- இறுதிக் கட்டம் 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியனில் செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

## 2.2 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்

2.2.1. இந்த வேலைத் திட்டத்தின் முதலாவது கட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி எனும் தலைப்பில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் 2014 ஜூலை மாதம் 02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2014 ஜூலை 11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை பத்திர இலக்கம் 14/0870/504/088 இன் மூலம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இந்த முதலாவது கட்டத்தின் கீழ் தென் மாகாணத்தினுள் தெரிவு செய்யப்பட்ட கிராமப் பிரதேசம் மற்றும் சமூகப் பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடையில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி வலையமைப்பினை உருவாக்குதல், நெடுஞ்சாலைகள் மற்றும் கடற்படை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி முகவர் நிறுவனங்களின் கொள்ளளவினை அதிகரித்தல், மீதி கட்டங்களின் கீழ் நிதியிட எதிர்பார்த்துள்ள செயற்றிட்டங்களுக்கான கணிப்பாய்வு, சாத்தியகூறு ஆய்வு மற்றும் பொறியியல் திட்டத்தினை தயாரிப்பதற்குப் பிரேரணை செய்யப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிட்ட முதலாவது கட்டத்தில் முழு முதலீட்டு மொத்த செலவு ஐக்கிய அமெரிக்க டொலர் 118 மில்லியனாக உள்ளதுடன் அதற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு ஐக்கிய அமெரிக்க டொலர் 18 மில்லியன் ஆகும். இதற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியன் கடன்தொகை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசிய அபிவிருத்தி நிதியத்திடமிருந்து கிடைத்திருந்தது. இந்த கடன் தொகையானது உடன்படிக்கைக் கலந்துரையாடல் இடம்பெறும் தினத்தில் காணப்பட்ட செலவாணி வீதத்திற்கமைய கணக்கிடப்பட்ட விசேட பற்றுக் கணக்கு உரிமை பிரயோகத்

தொகையில் பெற்றுக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தனர். இந்தக் கடன் தொகைக்காக வருடாந்த வட்டி வீதம் 2 சதவீதமாக உள்ளதுடன் 5 வருட நிவாரண காலம் உள்ளிட்ட 25 வருட கால எல்லைக்குள் சமனான தவணைகளில் மீளச் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2.2.2. வேலைத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தினைச் செயற்படுத்தவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி எனும் தலைப்பில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் 2014 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2014 ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை பத்திர இலக்கம் 14/1565/504/138 இன் மூலம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இந்த கட்டத்தின் கீழ் சப்பிரகமுவ மாகாணம் மற்றும் களுத்துறை மாவட்டத்திற்காகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டத்தில் மற்றும் மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணத்தினுள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள செயற்றிட்டங்களில் முதலாவது பகுதிக்கு நிதியிட எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

அந்த கட்டத்திற்காகவும் பல கட்ட நிதி வசதிகளில் இரண்டாவது பகுதியாக ஐக்கிய அமெரிக்க டொலர் 107 மில்லியனைக் கடன் தொகையாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொது மூலதன வள நிதியத்தினால் வழங்கப்படும் ஐக்கிய அமெரிக்க டொலர் 98 மில்லியன் கடன் தொகை மற்றும் ஆசிய அபிவிருத்தி நிதியத்தினால் கிடைக்கும் ஐக்கிய அமெரிக்க டொலர் 09 மில்லியனும் உள்ளடங்கலாக ஆகும். இரண்டாவது கட்டத்திற்கான அரச முதலீடு ஐக்கிய அமெரிக்க டொலர் 12.5 மில்லியன் ஆகும்.

2.2.3. ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் மூன்றாவது கட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியில் நிதி உதவி பெற்றுக் கொள்ளல் எனும் தலைப்பில் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சரினால் 2015 ஒக்டோபர் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன யோசனைக்காக 2015 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 15/1478/706/013 கொண்ட அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்தக் கட்டத்தின் கீழ் பிரதேச சபை மற்றும் மாகாண வீதி உள்ளிட்ட கிராம நுழைவு வீதிகள் 2,548 கிலோ மீற்றர் மற்றும் தேசிய வீதி 118 கிலோ மீற்றரை மேம்படுத்தவும் மற்றும் பராமரிக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் மூலம் நிதியிடப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களினதும் இரண்டாம் பகுதியான நிதியிடல் பிரேரிக்கப்பட்ட மூன்றாவது கட்டத்தின் மூலம் மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக மொத்த முதலீடு ஐக்கிய அமெரிக்க டொலர் 223.88 மில்லியன் ஆகும். அந்தத் தொகையில் அரசின்

பங்களிப்பு ஐக்கிய அமெரிக்க டொலர் 23.88 மில்லியனாக உள்ளதுடன் மீதி ஐக்கிய அமெரிக்க டொலர் 200 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இரு கடன் உடன்படிக்கை மூலம் வழங்கப்பட்டிருந்தது.

2.2.4. வேலைத்திட்டத்தின் நான்காம் கட்டத்தினைக் செயற்படுத்துவதற்காக 2017 செப்டெம்பர் 14 ஆம் திகதி தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சரினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் அந்த வங்கியின் பொது மூலதன வள நிதியத்தினால் ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியன் கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான யோசணைக்கு 2017 ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைப் பத்திர இலக்கம் 17/2078/706/108 இன் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

## 2.3 ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் உடன்படிக்கை ஏற்படுத்தல்

மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைய, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கு இடையில்,

- I ஆம் கட்டத்திற்காக 2014 நவம்பர் 05 ஆம் திகதி இலக்கம் 3171 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) கடன் உடன்படிக்கை
- II ஆம் கட்டத்திற்காக 2015 மே 28 ஆம் திகதி இலக்கம் 3221 எஸ்ஆர்ஜ மற்றும் 3222 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) கடன் உடன்படிக்கை
- III ஆம் கட்டத்திற்காக 2015 திசெம்பர் 11 ஆம் திகதி இலக்கம் 3325 எஸ்ஆர்ஜ மற்றும் 3326 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) கடன் உடன்படிக்கை
- IV ஆம் கட்டத்திற்காக 2017 திசெம்பர் 15 ஆம் திகதி இலக்கம் 3610 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) எனும் கடன் உடன்படிக்கை ஆகிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

## 2.4 கணக்காய்வினைத் தெரிவு செய்வதற்கான காரணம்

2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்றிட்ட ஆலோசகரினால் வழங்கப்பட்டிருந்த நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற அறிக்கை மற்றும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கடந்த காலப் பரீட்சிப்புகளில் செயற்றிட்டத்தின் பௌதீக முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினைக் குறித்த தினத்தில் எட்டுவதற்கு முடியாதிருந்தமை, ஒருசில ஒப்பந்தக்காரர்கள் வேலைகளை நிறுத்தியிருந்த காரணத்தினால் குறித்த வீதி செயற்றிட்டங்களின் பயனார்களுக்கு ஏற்பட்டிருந்த

சிரமங்கள் இந்த வேலைத்திட்டம் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளுவதற்கான காரணமாக உள்ளது.

## 2.5 கணக்காய்விற்கான அதிகாரபலம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது சட்டம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.6 கணக்காய்வு விடயப் பரப்பு

வேலைத் திட்டத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருந்த 42 மொத்த ஒப்பந்தப் பொதிகளில் கிராம வீதிகள் 3,143 கிலோ மீற்றர் மற்றும் தேசிய வீதி 400 கிலோ மீற்றரில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டாத 8 ஒப்பந்த பொதிகளின் 114 கிராமிய வீதிகளின் 705 கிலோ மீற்றர் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் முன்னேற்றம் ஆழமான பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, வடமேல் மாகாணத்தின் குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களின் பரந்துள்ள 20 வீதிகளின் நிலைகள் பௌதீகப் பரீட்சிப்பு செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 2.7 விடயப் பரப்பு மட்டுப்படுத்தப்படல்

(i) இந்த வேலைத் திட்டமானது 06 மாகாணங்களில் 13 மாவட்டங்கள் முழுவதும் பரந்து காணப்படுகின்றமையால் களப் பரீட்சிப்பிற்காக மனிதவளம் மற்றும் காலம் எல்லைக்குட்பட்டு இருந்தமையால் வடமேல் மாகாணத்தில் குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட வீதிகள் மட்டும் பௌதீகப் பரீட்சிப்பு நடவடிக்கைக்கு தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

(ii) வீதிகளைத் தெரிவு செய்கையில் வேலைத் திட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட மூலப் பிரமாணங்கள் சரியானவையா என்பதன் அடிப்படையிலே கணக்காய்வினை மேற்கொள்ளல்.

(iii) களப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களின் வேலைத் தளங்களில் ஒப்பந்தங்கள் இல்லாமை மற்றும் வீதிகளின் தரத்தினைப் பரீட்சிப்பதற்காக உரிய உத்தியோகத்தர்கள், விஞ்ஞானகூட வசதிகள் மற்றும் கருவிகள் இல்லாமை காரணமாக மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் நிலைமையினைப் பரீட்சிப்பதற்கு முடியாத காரணத்தால் சாட்சிகளைப் பெற்றுப் கொள்வது வரையறுக்கப்பட்டதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கணக்காய்வினை மேற்கொள்ளல்.

## 2.8 கணக்காய்வு நடைமுறைகள்

இந்தக் கணக்காய்விற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் பின்பற்றப்பட்டன.

(i) ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு வேலைத் திட்டத்திற்குரிய கொள்கைத் தீர்மானம், உரிய கட்டளைச் சட்டம், கொள்முதல் வழிகாட்டல் நூல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல் நூல், ஒப்பந்த ஆவணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் வேறு உரிய ஆவணங்களை கணிப்பாய்வு செய்தல்.

(ii) இந்த வேலைத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு அடிப்படையான அரம்பக் கற்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட பொருளாதாரப் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் வாகனப் போக்குவரத்து ஆய்வு அறிக்கையின் தரவுகளைக் கணிப்பாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

(iii) உரிய ஏனைய ஆவணங்கள் மீளாய்வு மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தரிடம் மற்றும் நிறுவனங்களிடம் தேவையான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்ளல்.

(iv) களப் பரீட்சிப்பு மூலம் பௌதீக நிலைமையினை அவதானித்தல் மற்றும் மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்.

## 2.9 கணக்காய்வின் உப நோக்கங்கள்

இந்த வேலைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை எட்டுவதற்காக முகாமைத்துவத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயல்கள் உரிய வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்தல் இந்த செயலாற்றல் கணக்காய்வின் உப நோக்கமாகும்.

(அ) வேலைத் திட்டத்தினை ஒழுங்காகத் திட்மிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டுவதற்கான வினைத்திறனை மதிப்பிடல்.

(ஆ) வேலைத் திட்டத்தினை செயற்படுத்துகையில் முன்னுரிமை ஒழுங்கு வரிசைக்கமைய வீதிகளை அறிந்து கொள்ளல், உரிய ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்தல் மற்றும் செயற்றிட்டம் குறித்த தரத்துடன் உரிய கால எல்லைக்குள் செயற்படுத்தல் மற்றும் பூர்த்தி செய்தல் தொடர்பான செயலாற்றலை மதிப்பிடல்.

(இ) வேலைத்திட்டமானது அதன் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டுவதற்காக செயற்படுத்துகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியத்தின் பயன்பாடு உயர் செயலாற்றல் மட்டத்தினை எட்டுவதற்கு உகந்த வகையில் பொருளாதார ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பிடல்.

## 2.10 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள்

(i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவை

(ii) ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டிக் கோவை

(iii) ஒப்பந்த உடன்படிக்கை அடிப்படையிலான நிபந்தனைகள்

(iv) சுற்றறிக்கைகள்,

- நெடுஞ்சாலைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்
- அரச நிதி சுற்றறிக்கைகள்

(v) கிரய மதிப்பீடு

(vi) அங்கீகரிக்கப்பட்ட வீதங்கள் (பீஎஸ்ஆர், எச்எஸ்ஆர்)

(vii) படைப்புத் திட்டத்தின் மூலமான வியூகங்கள்.

# 3. கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடல்

### 3.1.1. வீதி நிகழ்ச்சித் திட்டத்தினை இனங்காணல் (வேலைத் திட்டத்தின் விடயப் பரப்பினை மாற்றுதல்)

வேலைத் திட்டத்தின் ஆரம்பத் திட்டங்களுக்கமைய, 2,200 கிலோ மீற்றர் கிராம வீதிகள் மற்றும் 400 கிலோ மீற்றர் கொண்ட தேசிய வீதகளைப் புனரமைப்பு செய்தல் எதிர்பார்க்கப்பட்டதுடன் அது 2015 ஒக்டோபர் 29 ஆம் திகதியிலான அமைச்சரவை அனுமதியின் மூலம் 3,108 கிலோ மீற்றர் கொண்ட கிராம வீதிகள் மற்றும் 248 கிலோ மீற்றர் கொண்ட தேசிய வீதிகள் புனரமைப்பு எனும் வகையில் 02 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தன. எவ்வாறு இருப்பினும், 2015 ஒக்டோபர் 22 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 15/1401/713/007/டீ.பீ.ஆர் கொண்ட அமைச்சரவை அனுமதியின் கீழ் மத்திய, சப்பிரகமுவ மற்றும் மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தின் கிராம வீதிகளும், 2015 ஒக்டோபர் 22 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 15/1401/713/008/டீ.பீ.ஆர் கொண்ட அமைச்சரவை அனுமதியின் கீழ் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் கிராம வீதிகளும், 2015 மே 28 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 15/0578/618/016/டீ.பீ.ஆர் கொண்ட அமைச்சரவை அனுமதியின் கீழ் தென் மாகாணத்தின் கிராம வீதிகள் புனரமைப்புச் செயற்றிட்ட கண்காணிப்பு நடவடிக்கைக்காக ஆலோசனை ஒப்பந்தம் வழங்குகையில் புனரமைப்பு செய்யப்பட

வேண்டிய கிராம வீதிகளின் நீளம் 3,143 கிலோமீற்றர் என்பதாக உடன்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.1.2. செயல்நடவடிக்கைத் திட்டம்

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் 05 செயற்றிட்டங்களின் ஊடாக தெற்கு, சப்பிரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய மாகாணங்களில் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் 3,143 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளும் மற்றும் 400 கிலோ மீற்றர் தேசிய வீதிகளும் புனரமைப்பு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு இருந்தன. அதற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பல கட்ட நிதி வசதிகளின் கீழ் 06 கட்டங்களில் நிதி வழங்கத் திட்டமிடப்பட்டு இருந்தன.

எவ்வாறு இருப்பினும், இவ்வாறு ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் முன்வைக்கப்பட்ட நிதித் திட்டங்களுக்கமைய அந்த ஒவ்வொரு கட்டங்களிலும் எவ்வளவு தொகை ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் ஒவ்வொரு மாகாணங்களிலும் வீதி புனரமைப்பிற்கு செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு ஒதுக்கப்படும் நிதி வினைத் திறனுடனும் மற்றும் உற்பத்தித் திறனுடனும் குறித்த வீதி புனரமைப்பிற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதனைப் பற்றிய உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்ளல், தேவையான நிதியினைப் பயன்படுத்தல் தொடர்பான திட்டமொன்று கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் 02 ஆம் கட்டத்தின் கீழ் இலக்கம் 3222-SRI(SF) கொண்ட கடன் உடன்படிக்கையும், III ஆம் கட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட இலக்கம் 3326SRI(SF) ரூபா 1,199 மில்லியன் மற்றும் ரூபா 3,572 மில்லியன் கடன் உடன்படிக்கையும் முறையே 2017 ஏப்பிரல் 07 மற்றும் 2017 மார்ச் 27 ஆம் திகதியில் மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்தக் கடன் உடன்படிக்கையின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்தினை தீர்மானமாக அறிந்து கொள்ள முடியாது இருந்ததுடன் அந்தக் கடன் தொகையினை மீளச் செலுத்தும் நடவடிக்கை 2020 ஜனவரி மாதம் தொடக்கம் செயற்பட வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

## 3.2 செயற்றிட்டத்தினை அமுலாக்கல்

### 3.2.1. வீதிகளைத் தெரிவு செய்தல்

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தென் மாகாணம், வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தின் மாகாண சபைச் செயலாளர்களுடன் வீதி அபிவிருத்தி

அதிகாரசபை புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தியிருந்தன. அந்த ஒப்பந்தங்களில் உடன்பட்டிருந்த நிபந்தனைகளுக்கமைய மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உததியோகத்தர்களின் உதவியுடன் தீர்மானிக்கப்பட்ட மூலப் பிரமாணங்களின் அடிப்படையில் வீதிகள் தெரிவு செய்தல் இடம்பெற்றிருந்தது.

புனரமைப்பு செய்வதற்காக வீதிகளைத் தெரிவு செய்கையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூலப் பிரமாணங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தன.

- போதியளவு வீதிப் பரப்பினைக் கொண்டிராத வீதிகள்,
- சுற்றுச் சூழல் பாதிப்புள்ள பகுதிகளில் அமைந்துள்ள வீதிகள்,
- தனியார் வீதி மற்றும் நகர வீதி தவிர்ந்த 50 குடும்பங்கள் அல்லது அதற்கு மேல் வசிக்கும் வீதிகள்,
- மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் உள்ள வீதிகள்,
- கல்வி மற்றும் நீர் வசதிகள் உள்ள வீதிகள்,
- சுகாதார வசதிகள் (மருத்துவமனை அல்லது மருந்தகங்களுக்கான நுழைவு வீதிகள்),
- விவசாய கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளுக்கான நுழைவு வீதிகள்,
- ஏனைய அனைத்துக் கைத்தொழில்கள் (சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான) நிலையங்களுக்கான நுழைவு வீதிகள், விவசாயப் பயிர் அல்லது ஏனைய உற்பத்திகளைச் சேகரிக்கும் மத்திய நிலையங்களுக்கான நுழைவு வீதிகள்,

இதற்கு மேலதிகமாக, வெற்றுக் காணிகளை அபிவிருத்தி செய்யக்கூடிய, பிரதான வீதிகளுக்கு நுழைய முடியாததால் ஏற்படும் பின்னடைவினை குறைத்துக் கொள்ளல், பிரதேச வசதிகளை ஒப்பு நோக்கல், கிராம நகர தொடர்புடைய அனைத்து அபிவிருத்தி ரீதியான அதிகாரங்களை உருவாக்குதல், சமூக நீதியை நிறைவேற்றுவதற்கான பின்புலமாக இருத்தல், சேகரித்த பெறுமதியினைத் தயாரித்தல் போன்ற மூலப் பிரமாணங்களையும் கருத்திற் கொண்டு வீதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. மேலும், 2016 ஆம் ஆண்டில் வீதிகளைத் தெரிவு செய்தல் மற்றும் வேலை அளவு அட்டவணை தயாரித்தல் நடவடிக்கைக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு ஊக்கக் கொடுப்பனவாக ரூபா 19 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய வீதிகளைத் தெரிவு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முறையான கணிப்பாய்வு செய்யப்படாது தேசிய வீதி தொகுதிக்குட்பட்ட 5.90 கிலோ மீற்றர் நீளமான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய கட்டுனேரிய தொடக்கம் மாரவிலை வரையான வீதியை

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கிராம வீதி புனரமைப்பு செய்யும் வேலை முறையின் கீழ் தெரிவு செய்து பின்னர் அது அகற்றப்பட்டு இருந்தது. இதனால் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கிராம வீதிகளின் நீளம் குறைந்துள்ளது.

(ஆ) தென் மாகாணத்தில் பல பொதிகளில் வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களின் ஊடாக பகுதி ரீதியாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த வீதிகள் புனரமைப்பு செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டைப் பொதி 02(H2) இன் கீழ் புனரமைப்பு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த (வீதி இலக்கம் 43) கடிகமுவ – பாலம்கட வரையான எக்கமுது மாவத்தை தொடக்கம் பதலவத்தை வரையான வீதியின் நீளம் வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கமைய 5.7 கிலோ மீற்றராக இருந்ததுடன் இந்த வீதியின் அண்ணளாவக 2 கிலோ மீற்றர் தூரம் வேறு செயற்றிட்டத்தின் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்ட காரணத்தால் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு உள்ள வீதிகளின் வேலை விடயப் பரப்பு 3.7 கிலோ மீற்றர் வரையிலும் குறைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் H2 பொதியின் கீழ் புனரமைப்பு செய்வதற்காக இருக்கும் 1.1 கிலோ மீற்றர் நீளமான (வீதி இலக்கம் 44) கோணதெனிஹேனகந்த ஊடாக ராஜபக்ஷ மாவத்தையின் உரிமைத்துவக் காணி உரிமையாளர்களிடையே காணப்பட்ட வழக்கின் காரணமாக ஒகேவெல பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒப்பந்தப் பொதி 03 இன் கீழ் புனரமைப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த வீதி இலக்கம் 50 பெரஹர மாவத்தை தொடக்கம் முல்கிரிகல பாடசாலை வரையான 3.20 கிலோ மீற்றர் நீளமான வீதிப் பகுதியானது தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒப்பந்தப் பொதி இலக்கம் 02 மற்றும் 03 இல் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த வீதியின் 2 கிலோ மீற்றர் தூரத்தினை வேறு வேலைத்திட்டத்தின் மூலம் இயல்பு நிலை தார் பயன்படுத்தி புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒப்பந்தப் பொதி 03 இன் கீழ் புனரமைப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த வீதி இலக்கம் 37 எலபன்ட்எக்க வீதியின் அண்ணளவாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தினை வேறு வேலைத்திட்டத்தின் மூலம் இயல்பு நிலை தார் பயன்படுத்தி புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.2. ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்தல் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடல்

தேசிய கொள்முதல் வழிகாட்டல் நூல் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல் நூல்களுக்கமைய சாதகமாய் பதிலளித்த குறைந்த ஏலதாரர்களாக (Lowest Evaluated Substantial Response Bidder) கருதப்பட வேண்டுமாயின் அந்த ஒப்பந்தத்தினை மகிழ்ச்சிகரமான வகையில் நிறைவேற்றுவதற்கு அந்த ஏலதாரருக்கு போதுமானளவு நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்கள் இருக்க வேண்டிய போதிலும் இந்த வேலைத்திட்டத்திற்குரிய ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்கையில் அந்த வளம் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படாத சந்தர்ப்பங்களுக்கான பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தின் பொதி 04 (KU04) மற்றும் புத்தளம் மாவட்டத்தின் பொதி இலக்கம் 02 (PU2) மற்றும் 03 (PU3) முறையே ரூபா 2,091 மில்லியன், ரூபா 1,464 மில்லியன் மற்றும் ரூபா 1,210 மில்லியனுக்கு 2016 ஓகஸ்ட் 01 ஆம் திகதி வீ.வீ.கருணாரத்ன நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வழங்கலுக்காக ஆரம்ப காலத்தில் அதாவது 2014 ஆம் ஆண்டில் கடன் முகவர் நிறுவனமான ஆசிய அபிவிருத்தி வங்கியானது தனது அனுமதியினை வழங்கி உடன்படாத நிலைமையொன்று உருவாகி இருந்த போதிலும் பின்னர் அதாவது 2016 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தத்தை குறித்த ஒப்பந்த நிறுவனத்திடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ்வாறு வழங்கப்படும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், பூர்த்தி செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிப்பதற்கு ஒப்பந்தகாரர் தவறியிருந்தமையால் ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனை 15.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு 2019 ஓகஸ்ட் 02 ஆம் திகதி மற்றும் 2019 நவம்பர் 27 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்திருந்தது. இந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட முறைமைகளுக்குரியதான பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(i) இவ்வாறு வழங்கப்படுகின்ற ஒப்பந்தக்காரர்களின் கடந்த கால அனுபவங்களைக் கவனத்திற் கொள்ளுமிடத்து இந்த ஒப்பந்தக்காரர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் செயற்படுத்தப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் செயற்பட்ட வடக்கு வீதி இணைப்பு செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்தப் பொதி CP8 மாங்குளம் - முல்லைத்தீவு வீதியின் 13+000 – 24+000 கிலோமீற்றர் மற்றும் ஒப்பந்தப் பொதி இலக்கம் CP17 இன் கீழ் மதவாச்சி – மன்னார், தலைமன்னார் வீதியின் 62+100 தொடக்கம் 76+500 கிலோ மீற்றர் வரை புனரமைப்பு

செய்யும் நடவடிக்கைகளில் பலவீனமான செயலாற்றல் மற்றும் பலவீனமான நிதி முன்னேற்றம் காரணமாக தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மேலும், 2014 ஒக்டோபர் 10 ஆம் திகதி தொழில்நுட்பக் குழுவின் அறிக்கைக்கமைய இந்த ஒப்பந்தகாரர் வேலைத் திட்டத்தின் கீழ் தென் மாகாணத்தின் கீழ் செயற்படும் மாத்தறை. காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குரிய ஒப்பந்தப் பொதிக்காகவும் விலை மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒப்பந்தகாரர்களினால் இதற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிச் செயற்றிட்ட வேலைகள் மேற்கொள்கையில் காட்டப்பட்ட பலவீனமான செயலாற்றல்யை காரணமாகக் கொண்டு மதிப்பீட்டுக் குழுவினால் குறித்த நிறுவனத்தினால் விண்ணப்பிக்கப்பட்ட சகல பொதிகளுக்குமான தொழில்நுட்ப விண்ணப்பப் பத்திரங்களையும் நிராகரிக்கவும் நிதி விண்ணப்பங்களைத் திறக்காது இருக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்திற்காக அமைச்சரவையினால் நிமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழுவின் (Cabinet Appointed Standard Procurement Committee) அனுமதியும் கிடைத்திருந்தது. மேலும், அந்தத் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைக்கமைய இந்த நிறுவனத்தின் முன்னேற்றம் குறைந்த தரத்தில் காணப்படுவதற்குப் பிரதான காரணமாக நிறுவனத்தின் நிதிப் பாய்ச்சலில் காணப்படும் சிக்கலான நிலைமைகள் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(iii) கேகாலை மாவட்டத்தில் வீதி வேலைத் திட்டத்திற்கான விலை கோரலின் போது 2014 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தகாரர் KE1, KE2 மற்றும் KE3 ஆகிய பொதிகளுக்கு உரியதான சமர்ப்பிக்கப்ட்ட விலை மனுக்களில் குறைவான விலையினை சமர்ப்பித்திருந்த போதிலும், அந்த ஒப்பந்தகாரர் தகைமை பெற்றிராத காரணத்தினால் அடிப்படை உரிமை மீறலாகக் கருதி 233/2015 வழக்கு இலக்கத்தின் கீழ் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதற்கு முன்னர் தென் மாகாணத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்புடைய பலவீனமான செயலாற்றல் காரணமாக இந்த ஒப்பந்தகாரரை மீளவும் தெரிவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வேறு நிதி மூலங்களின் கீழ் அதாவது உள்நாட்டு வங்கிகளில் ரூபா 3,600 மில்லியன் கடன் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அதற்கு அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iv) இத்தகைய பின்புலத்தின் கீழ் குறித்த ஒப்பந்த வழங்கலுக்காக மீண்டும் விலை மனு கோரல் 2016 ஜனவரி 12 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அங்கு மேற்கூறிய வகையில் தகுதி பெற்றிருக்காத போதிலும் இந்த ஒப்பந்த நிறுவனம் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் 4 பொதிகளில் சாதகமான பதில் தெரிவிக்கப்பட்ட குறைந்த விலை மனு சமர்ப்பித்த ஒப்பந்தகாரராக இருந்த காரணத்தினால் நிறுவனத்தின் நிதி கொள்ளளவு மற்றும் ஸ்தீர தன்மை தொடர்பான உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மக்கள் வங்கி மற்றும் ஹட்டன் நஷனல் வங்கி மூலம் கடன் வசதிகள் (Line of credit) பெற்றுக் கொள்ளுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்திருந்தார். இதில் இந்த வங்கியினால் அந்த ஒப்பந்தகாரர்களுக்கு ஒரு பொதிக்கான வேலைகளுக்கு மட்டும் வசதி வழங்கவதற்கு உறுதிப்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, இந்த ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்கையில் நிதி ரீதியான ஆற்றல் மற்றும் ஏனைய காரணிகள் சரியான முறையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் இவ்வாறான நிலைமையில் இந்த ஒப்பந்தகாரருக்கு 3 ஒப்பந்தப் பொதிகள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் சிக்கலாக காணப்பட்டது.

(ஆ) வெளிநாட்டு ஒப்பந்தப் பங்காளரின் அங்கத்துவத்துடன் ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் தனியார் நிறுவனம் ராணி கன்ஸ்ட்ரக்ஷன் தனியார் நிறுவனம் எனும் பெயரில் கூட்டு முயற்சியாக களுத்துறை மாவட்டத்தில் ஒப்பந்தப் பொதிகள் KL2 மற்றும் KL3 ஆகிய ஒப்பந்தங்களுக்கான உடன்படிக்கையினை எட்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அந்த கூட்டு வியாபார உடன்படிக்கையின் நிபந்தனை பொதுப் பிரிவு 1.14 இன் பிரகாரம் இரு நபர்கள் அல்லது பலர் இணைந்து இலங்கையினுள் ஒப்பந்த நடவடிக்கையினை நிறைவேற்றுவதற்காக கூட்டு வியாபாரமொன்றினை உருவாக்குவார்களாயின், அந்த நபர்கள் ஒன்றிணைந்து மற்றும் தனித்தனியாக அந்த ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவதற்கு தொழில் வழங்குனர்களுக்கு பொறுப்பளித்தல் வேண்டும். அவ்வாறிருக்க, அத்தகைய பொறுப்பளித்தல் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த வெளிநாட்டு ஒப்பந்த நிறுவனம் இலங்கையில் வேறொரு ஒப்பந்த நிறுவனத்துடன் இணைந்து கூட்டு வியாபாரத்தினை உருவாக்குவதற்கு முன்னர் 1987 இன் 03 ஆம் இலக்க ஒப்பந்தச் சட்டம் மற்றும் 2006 இன்

அரச கொள்முதல் வழிகாட்டல் நூலின் 7.9.5(c)(i) உப பிரிவின் பிரகாரம் இலங்கையில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருந்ததா என்பது ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் பொதுவான உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு கொள்முதல் குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) குருணாகல் மாவட்டத்தின் KU3 மற்றும் KU5 பொதிகள் மற்றும் புத்தளம் மாவட்டத்தின் PU1 பொதி கிராம வீதிகள் புனரமைப்புக்காக ஒப்பந்தம் வழங்கப்பட்ட சீன நிறுவனமான ரன்கென் ரெயில்வே கட்டட நிறுவனம், 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த சட்டதிற்கமைய பதிவு செய்யப்பட்டிருந்தது என்பதற்கான பொது உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளுவதற்குக் கொள்முதல் குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2.3. ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் திரவத்தன்மை பிரச்சினைகள்

ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்கையில் அவர்களின் திர்வத்தன்மை தொடர்பில் போதுமானளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்கள் பலர் நிதி குறைபாடு மற்றும் புழக்க சிக்கல்களுக்கு முகங் கொடுத்துள்ளதுடன் வீதி புனரமைப்பு நடவடிக்கையை குறித்த தினத்தில் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய செயற்றிட்டத்தினால் ஒப்பந்தகாரர்களின் நிதிப் பாய்ச்சல் முகாமைத்துவத்தினுள் உள்ள சிக்கல்களை குறைப்பதற்காக எஸ்க்ரோ (ESCROW) எனும் பெயரில் நிதி வசதியொன்றினைத் தயாரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் துணையுடன் உள்நாட்டு வணிக வங்கிகளுக்கிடையே இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், 04 ஒப்பந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்நாட்டு வணிக வங்கிகளுடன் எஸ்க்ரோ கடன் வசதிக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. மேலும், அதற்காக கடன் வழங்கும் முகவர் நிறுவனத்தின் (ADB) அனுமதியினைப் பெற்றுக் கொள்ளும் சாட்சியினை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. இவ்வாறு கடன் வசதி வழங்கப்பட்ட ஒப்பந்தகாரர்களின் பலவீனமான செயலாற்றல் மற்றும் நிதிமுகாமைத்துவச் சிக்கல்கள் காரணமாக பிற்காலங்களில் அந்த ஒப்பந்த நிறுனங்களுள் ஒப்பந்தகாரர் இருவருக்கு குறித்த 10 ஒப்பந்தப் பொதிகளின் ஒப்பந்த உடன்படிக்கையை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்கையில் குறித்த செயற்பாட்டினை நிறைவேற்றக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2.4. ஒப்பந்தப் பொதிகள் கைவிடப்படல்

(அ) முழுமையாக எடுத்துக் கொள்ளுமிடத்து கிராம வீதிகள் புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட ரூபா 71,978.15 மில்லியன் பெறுமதியான 42 ஒப்பந்தப் பொதிகளில் 12 பொதிகள் ஒப்பந்தக்காரர்களினால் புனரமைப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டு இருந்தன. அதற்கமைய குருணாகல், புத்தளம், மாத்தளை, கேகாலை, காலி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்கில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தவதற்குத் தீர்மானிக்கப்ட்டிருந்த ரூபா 21,459 மில்லியன் மற்றும் வீதியின் நீளம் 1003.79 கிலோ மீற்றரைக் கொண்ட 12 ஒப்பந்தங்கள், 2019 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு நிறுத்தப்பட்ட போது அந்த ஒப்பந்தத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 10,583.6 மில்லியன் ஆகும். விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| மாவட்டம் | ஒப்பந்தப் பொதி | பிரேரிக்கப்பட்ட வீதிகளின் அளவு நீளம் கிலோ மீற்றர் | ஒப்பந்தப் பொதியின் பெறுமதி ரூபா மில்லியன் | ஒப்பந்தப் பொதியை வழங்கிய திகதி | ஒப்பந்தப் பொதி நிறுத்தப்பட்ட திகதி | நிறுத்தப்பட்ட தினம் வரையிலும் செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| குருணாகல் | KU03 | 99.12 | 1,976 | 2016.08.01 | 2019.02.26 | 909.9 |
| குருணாகல் | KU04 | 106.02 | 2,091 | 2016.08.01 | 2019.11.27 | 1048.6 |
| குருணாகல் | KU05 | 100.85 | 1,996 | 2016.08.01 | 2019.02.06 | 835.6 |
| புத்தளம் | PU02 | 74.17 | 1,463 | 2016.08.01 | 2019.07.19 | 730.2 |
| புத்தளம் | PU03 | 53.14 | 1,210 | 2016.08.01 | 2019.11.13 | 585.8 |
| மாத்தளை | MA01 | 75.12 | 1,260 | 2015.12. 17 | ஒப்பந்தக்காரரால் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது | 937.2 |
| காலி | G01 | 63.6 | 1,458 | 2015.05.18 | 2019.02.12 | 876.9 |
| கேகாலை | KE01 | 74.6 | 1,972 | 2015.12.17 | ஒப்பந்தக்காரரால் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது | 964.7 |
| இரத்தினபுரி | R01 | 80.63 | 2,022 | 2015.12.16 | ஒப்பந்தக்காரரால் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது | 1019.8 |
| இரத்தினபுரி | R02 | 92.24 | 2,383 | 2015.12.16 | ஒப்பந்தக்காரரால் வழக்கு | 1154.6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொடுக்கப்பட் டிருந்தது | |
| களுத்துறை | KL02 | 88.44 | 1,811 | 2016.09.29 | 2019.08.02 | 772.8 |
| களுத்துறை | KL03 | 95.82 | 1,817 | 2016.09.29 | 2019.08.02 | 747.5 |
| | | 1,003.79 | 21,459 | | | 10,583.6 |

(ஆ) வடமேல் மாகாணத்தின் குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய இரு மாவட்டங்களிலும் எட்டு ஒப்பந்தப் பொதிகளுக்கு உரியதான வீதிகளில் தெரிவு செய்யப்பட்ட 114 பகுதிகள் மூலம் ரூபா 14,575 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 695.5 கிலோ மீற்றர் நீளத்தினை இந்த செயற்றிட்டத்தின் மூலம் புனரமைப்புச் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 8,738.70 மில்லியன் பெறுமதி கொண்ட ஐந்து ஒப்பந்தப் பொதிகளுக்கு அதாவது KU3, KU4, KU5, PU2 மற்றும் PU3 ஆகிய ஒப்பந்தங்களுக்குரிய ரூபா 4,628.6 மில்லியன் பெறுமதியான 68 வீதிப் பகுதிகள் அல்லது 60 சதவீதமானது அதாவது 421.17 கிலோ மீற்றர் அல்லது 61 சதவீதமான வேலைகள் பூர்த்தி செய்யப்படாது இடைநடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தால் 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அந்த ஒப்பந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்த பொதி தொடர்பான பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i). பொது ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 8.2 மற்றும் 10.2 இன் பிரகாரம் பொதிகளுக்குரிய பூர்த்தி செய்யப்பட்ட வீதிகள் தொழில் வழங்குனரினால் (Employer) கையேற்றல் (Take over) ஒவ்வொரு வீதிகளாக மேற்கொள்ள வேண்டிய போதிலும், மேற்கூறிய ஐந்து ஒப்பந்தப் பொதிகளுக்கான 68 வீதிகளில் ஒரு வீதியேனும் அவ்வாறு கையேற்பதற்குப் பொருத்தமான நிலைமையில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii). இவ்வாறு பூர்த்தி செய்யப்படாது நிறுத்தப்பட்ட காரணித்தினால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தப் பொதிகளுக்கான நிறுத்தல் உத்தரவு பெறப்பட்ட தினம் வரையிலும் ஒப்பந்தப் பொதிகளின் மதிப்பிட்ட மொத்த செலவின் 50 சதவீதத்திற்கு கிட்டிய தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சரியான முறையில் வேலை பூர்த்தி செய்யாததால் அவ்வாறு செலவிடப்பட்ட பெறுமதிக்குரிய வேலைகள் குறித்த தரத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் அவற்றின் நிலைத்திரு தன்மை தொடர்பில் நிச்சயமற்ற நிலைமை அவதானிக்கப்பட்டது.

(iii). இந்தப் பொதிகளின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக மீண்டும் விலைமனு கோருவதற்கு வேலை நிறைவு செய்த திகதியில் ஒப்பந்தத்தின் பெறுமதியினை மதிப்பிட வேண்டிய போதிலும் பொதி இலக்கம் KU4, PU2 மற்றும் PU3 ஆகிய பொதிகளுக்கான ஒப்பந்தத்தை நிறுத்தும் உத்தரவு பெறப்பட்ட தினத்தில் பெறுமதி கணக்கிடப்பட்டமை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலே (ஆ) இற்கு அமைய இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த வீதிகள் பொதுமக்களுக்கு குறைந்தளவில் பயன்படுத்துவதற்குத் தேவையான வேலைகள் மற்றும் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த வேலைப்பகுதியின் மூலம் வீதியினைப் பயன்படுத்துவோருக்கு ஏற்படுத்தக்கூடிய விபத்துக்களைக் குறைப்பதற்காக மேலதிகமாக செய்ய வேண்டிய வேலைக்காக ரூபா 129 மில்லியன் செலவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| ஒப்பந்தப் பொதி | மதிப்பிடப்பட்ட செலவு | | மொத்தம் ரூபா மில்லியன் | பின்பற்றப்பட்டிருந்த செயன்முறைகள் மற்றும் முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | விபத்துக்களைக் குறைப்பதற்காக ரூபா மில்லியன் | வீதியினைப் பயன்படுத்தக் கூடிய நிலைக்கு கொண்டு வருவதற்காக ரூபா மில்லியன் | | |
| KU 03 மற்றும் KU 05 | | -<br>- | 104 | ஓப்பந்தப் பெறுமதி KU 01 இன் மூலம் நிறைவேற்றப்பட்டு அதற்காக 2019 ஓகஸ்ட் மாதம் இடைக் கொடுப்பனவுச் சான்றிதழ் இலக்கம் 39 மூலம் ரூபா 92 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| KU 04 | 0.89 | 21 | 22 | அந்த ஒரு ஒப்பந்தப் பொதியின் மூலமும் நிறைவேற்ற இணங்கியிருக்கவில்லை. |
| PU 02 | 0.62 | 53 | 54 | ஓப்பந்தப் பொதி PU 1 இன் மூலம் மேலதிக எல்லையினை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. |
| PU 03 | 0.52 | 55 | 56 | |
| மொத்தம் | | 129 | 236<br>472 | |

அதற்கமைய, KU 03 மற்றும் KU 05 ஆகிய இரண்டு ஒப்பந்தப் பொதிகளில் மேலே குறிப்பிடப்பட்ட வேலைகள் இரண்டிற்காக KU 01 பொதியின் மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 92 மில்லியன் பெறுமதி மற்றும் KU 04, PU 02 மற்றும் PU 03 ஆகிய ஒப்பந்தப் பொதிகள் மூன்றிற்காக மதிப்பிடப்பட்ட செலவான ரூபா 132 மில்லியனில் குறித்த வேலை விடயத்தை நிறைவேற்றுவதால் ஏற்படும் உண்மையான செலவான இந்த மேலதிக செலவினைக் குறித்த ஒப்பந்த பொதிகளில் இருந்து அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இந்த இடைநடுவில் வேலை நிறுத்தப்பட்டிருந்த ஒப்பந்தப் பொதிகளில் வேலை நிறுத்தப்பட்தன் பின்னர் அந்தப் பொதிகளில் இணைந்து சேவையாற்றிய தொழில் வழங்குனர் (Employer) மற்றும் பொறியியலாளரின் (Consultant) பதவியணி பராமரிப்பிற்காக வேதனம் மற்றும் கொடுப்பனவு, வீட்டு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் வாகன வசதிகளுக்காக இடைக்கால கொடுப்பனவு இலக்கம் 39 இற்கமைய 2019 ஒகஸ்ட் மாதம் வரையிலும் மட்டும் மொத்தமாக ரூபா 23 மில்லியன் செலுத்தப்பட்டு இருந்ததுடன், அந்தக் கொடுப்பனவிற்காக மாறுபடும் கட்டளையாக (Variation orders) ஒப்பந்த பொதி இலக்கம் KU 01, KU 02 மற்றும் PU 01 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, நிர்மாண நடவடிக்கை மேற்கொள்வதைத் தவிர இவ்வாறு செலுத்தப்பட்ட செலவானது வேலைத் திட்டத்திற்கு மேலதிக செலவு என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, இங்கு ரூபா 23.38 மில்லியனை மேலதிகத் தொகையாக செலவிட நேரிட்டுள்ளது. விபரங்கள் அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.2.5. மந்தகதியில் செயற்படும் ஒப்பந்தப் பொதிகள்

ஒட்டுமொத்தமாக கருத்திற்கொள்ளுமிடத்து ரூபா 9,520 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 05 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய ஒப்பந்தக்காரர்களின் பலவீன செயலாற்றல் இருக்கையிலும் செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக 18 மாதங்கள் தொடக்கம் 24 மாதங்கள் வரையான கால வீச்சினுள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| மாவட்டம் | ஒப்பந்த பொதி | வீதிகளின் அளவு நீளம் கிலோ மீற்றர் | ஒப்பந்தப் பொதியின் பெறுமதி ரூபா. மில்லியன் | பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்ட திகதி | கால நீடிப்பின் கீழ் பொதியினை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் திகதி | கால நீடிப்பு செய்யப்பட்ட கால எல்லை | 2019 நவம்பர் 30 ஆம் திகதியில் பௌதிக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| ----------- | ----------- | -------- | ------------ | ------------- | ---------------- | ------------ | ------------- |
| நுவரெலியா | PU01 | 92.4 | 1,706 | 2018.07.31 | - | - | 99.5 |
| நுவரெலியா | NE01 | 76.80 | 2,297 | 2017.12.16 | 2019.12.20 | 24 மாதங்கள் | 86.18 |
| நுவரெலியா | NE03 | 65.56 | 2,069 | 2017.12.16 | 2019.09.30 | 21 மாதங்கள் | 99.69 |
| கேகாலை | KE02 | 78.10 | 1,816 | 2018.03.28 | 2019.09.30 | 18 மாதங்கள் | 98.94 |
| கேகாலை | KE03 | 67.67 | 1,632 | 2018.03.28 | 2019.10.31 | 19 மாதங்கள் | 95.96 |
| | | | 9,520 | | | | |

### 3.2.6. வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் பொதிகள்

முழுமையாக எடுக்குமிடத்து 42 ஒப்பந்தப் பொதிகளின் முழு நீளமான 3,143 கிலோ மீற்றரில் ரூபா 41,363 மில்லியன் பெறுமதிக்கான 1,757.48 கிலோ மீற்றர் நீளமான மொத்த துாரத்தைக் கொண்ட 25 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய காலத்தினை நீடிப்பு செய்வதற்குட்பட்டு அனைத்து வீதிகளினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.2.7. நிர்மாணங்களின் தரம் தொடர்பான சிக்கல்கள்

மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட பல வீதிச் செயற்றிட்டங்கள் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவதானிக்கப்பட்டன.

(அ) குருணாகல் மாவட்டத்தில் ரூபா 2,092.2 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட ஒப்பந்தப் பொதி இலக்கம் 04 (KU04) இன் கீழ் வீதி இலக்கம் 96 காசிகொடே சந்தி தொடக்கம் மீ ஓயா பாலத்தின் ஊடாக பீல்ல வரையான 4.30 கிலோ மீற்றர் நீளத்தினைக் கொண்ட வீதியில் 4.11 கிலோ மீற்றர் இயல்பு நிலை தாரினை இட்டு வீதித்தளம் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த வீதியில் 1+802 மற்றும் 1+900 இற்கும் இடையில் வீதித் தளத்தின் அகலம் ஒரு மீற்றரும் மற்றும் நீளம் முறையே 12 மீற்றர் மற்றும் 7.6 மீற்றர் பொருத்தமற்ற அறிக்கை (NCR) மூலம் அறிந்து கொள்ளப்பட்டிருந்த இரு இடங்களில் மீளத் தயாரிக்கப்பட்ட வீதித் தளப் பகுதி மற்றும் 3+060 கிலோ மீற்றர் தொடக்கம்

3+120 கிலோ மீற்றர் வரையான 60 மீற்றர் கொண்ட இன்னுமொரு இடத்தின் வீதியின் சமதரையின் சிறிதளவு கீழிறங்கி இருந்தது. மேலும், 1+794 தொடக்கம் 1+807 வரை வீதியின் இடது பக்க ஓரத்தில் 13 மீற்றர் அளவிலான தூரம் இயல்பு நிலை தார் வீதித்தளம் வெடித்துக் காணப்பட்டது. மேலும், வீதியின் முடிவில் பொருத்தப்பட்டிருந்த வீதியின் விபரங்கள் அடங்கிய அறிவிப்புப் பலகை உடைந்து விழுந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2020 மே 13 ஆம் திகதி மீளவும் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பின் போது இந்த வீதியின் இயல்பு நிலை தார் வீதித் தளம் முழுமையாக கழுவிச் செல்லப்பட்டு மேலும் பாவணைக்கு உதவாத நிலையில் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.




(2019 நவம்பர் 27 ஆம் திகதியில் நிலைமை)




(2020 மே 13 ஆம் திகதியில் நிலைமை)

(வீதி இலக்கம் 96 காசிகொடே சந்தி தொடக்கம் மீ ஓயா காலம் ஊடாக பீல்ல வரையான வீதி)

(ஆ) குருணாகல் மாவட்டத்தின் ஒப்பந்தப் பொதி இலக்கம் KU04 இன் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த நெலும்பத் குளம் - உடதிவுல் குள வீதி 7.6 கிலோ மீட்டர்கள் இயல்பு நிலை தாரைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் பல இடங்களில் பழுதடைந்தும் வெடிப்புக்களுடனும் (cracks) இருந்தமை அவதானிக்கப்பட்டது. களப் பரீட்சிப்பு நடாத்திய 2019 நவம்பர் 29 ஆம் திகதியில் வீதியின் குறைபாடுகளுக்கான கீழ் குறிப்பிட்ட வகையில் பொருத்தமற்ற அறிக்கை (Non Conformance Report) மற்றும் முடிவுறுத்தல் பொருந்தாமை தொடர்பான அறிவிப்பு (Non

Conformance Product Notification) வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த குறைபாட்டினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| திகதி | இலக்கம் | தன்மை | இடம் |
|---|---|---|---|
| 13/10/2017 | VVKD/IR/KU4/NCR-04 | அழுத்தக் குறைபாடு | 3+730-3+815F/W, 4+070-4+158F/W |
| 20/11/2017 | VVKD/IR/KU4/NCR-09 | இயல்புநிலை தார் மூலம் தயாரிக்கப்பட்ட வீதித் தளத்தில் வெடிப்புகள் | 5+532-5+535 LHS, 5+332-5+335 RHS |
| 14/09/2018 | I-Road/PIC-02/VVK/KU4/NCPN/003 | இயல்புநிலை தார் மூலம் தயாரிக்கப்பட்ட வீதித் தளத்தின் 95 இடங்களில் வெடிப்புகள் | 95 இடங்கள் |
| 22/08/2019 | I-Road/PIC-VVK/ KU04/NCRN/16 | இயல்புநிலை தார் மூலம் தயாரிக்கப்பட்ட வீதித் தளத்தின் 266 இடங்களில் வெடிப்புகள் | 266 இடங்கள் |

இயல்புநிலை தாரைப் பயன்படுத்தி தயார்படுத்தப்பட்ட வீதித்தளத்தில் 2019 ஓகஸ்ட் 22 ஆம் திகதியில் காணப்பட்ட குறைபாடுகளை I-Road/PIC/VVK/KU4/NCPN/16 இன் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினமான 2019 நவம்பர் 26 ஆம் திகதி வரையிலும் அந்தக் குறைபாடுகள் அதிகரித்து இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்காக 2019 திசெம்பர் 03 ஆம் திகதியில் ரூபா 4.5 மில்லியன் அறவிடப்படாத வேலைப் பெறுமதிக்காக தொழில் வழங்குனரினால் பொருத்தமற்ற வேலை அறிவிப்பு இலக்கம் 13 இன் மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், தயாரிக்கப்பட்டிருந்த இயல்புநிலை தார்த் தளத்தின் இரு புறத்திலும் நிரப்பப்பட்டு அமைக்கப்பட்டிருக்காததன் அடிப்படையில் வீதித் தளத்திற்கு ஏற்படும் பாதிப்பு மேலும் உருவாகக் கூடும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) குருணாகல் மாவட்டத்தின் ஒப்பந்தப் பொதி இலக்கம் 01 (KU01) இன் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட வீதிகளில் மாதிரி பரீட்சிப்பில் தெரிவு செய்யப்பட்ட வீதி இலக்கம் 81 கொண்ட மாவீ அல சந்தியில் இருந்து தெலிபாவ பன்சல ஊடாக இலுக்பிட்டிய சந்தி வரையான 7.5 கிலோ மீற்றர் நீளம் கொண்ட

வீதியினை இயல்பு நிலை தார் (Asphalt) பரப்பி குறித்த தரத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்க, இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஒப்பந்தப் பொதி இலக்கம் 01 இன் கீழ் அளவிடைப் பத்திரம் தயாரிக்கையில் பாலம் புனரமைப்பு செய்வதற்காக அளவிடைப் பத்திரத்தில் ஒதுக்கீடு உள்ளடக்கப்படாத காரணத்தினால் சங்கிலி வரைபடம் 7+105 பாலம் புனரமைப்பு செய்யப்படாது ஒப்பந்தக்காரரினால் வீதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதனால் வீதியின் தரத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டு இருந்தது.



(வீதி இலக்கம் 81: சங்கிலி வரைபடம் 7+105)

### 3.3 வீதி வேலைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம்

#### 3.3.1 நிதி செயன்முன்னேற்றம்

வேலைத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ஐக்கிய அமெரிக்க டொலர் 906 மில்லியனுக்கு சமனான ரூபா 117,780 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐக்கிய அமெரிக்க டொலர் 800 மில்லியனுக்கு சமனான ரூபா 104,000 மில்லியனை 6 பல்வேறு பகுதி நிதி வசதிகளின் கீழ் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கி இருந்தது. அதில் முதல் 4 பகுதிகளின் கீழ் ரூபா 75,195 மில்லியன் தொகையினை 2019 ஓகஸ்ட் 31 ஆம் திகதியில் நிதியிட வேறான 4 கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் அவ்வாறு பெறப்பட்ட தொகைகளில் ரூபா 61,533.84 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிராம வீதி புனரமைப்பு வேலைகளுக்காகப் பயன்னடுத்தப்பட்டிருந்தது.

### 3.3.2 பௌதிக முன்னேற்றம்

வீதி நிர்மாணம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) இந்த வேலைத் திட்டத்தின் கீழ் 3,140 கிலோ மீற்றர் கிராம வீதிகள் மற்றும் 400 கிலோ மீற்றர் தேசிய வீதிகளைப் புனரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் 2,086.41 கிலோ மீற்றர் தூரத்தினைக் கொண்ட 508 கிராம வீதிகள் மட்டுமே புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய, எதிர்பார்க்கப்பட்ட கிராமிய வீதிகள் கிலோ மீற்றர்களில் 66.94 சதவீதமான பௌதிக முன்னேற்றம் எட்டப்பட்டு இருந்தது. மேலும், 265 கிலோ மீற்றர் நீளமான 6 தேசிய வீதிகளில் 77 கிலோ மீற்றர் நீளமான 02 தேசிய வீதிகளுக்கு மட்டும் ஒப்பந்தம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 42 ஒப்பந்தப் பொதிகளில் 12 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய ஒப்பந்தக்காரரினால் தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளின் காரணமாக ஒப்பந்தக்காரர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ரூபா 2,618.5 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணை மற்றும் ரூபா 3,154 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட வேலை ஆரம்பித்தல் முற்பணப் பிணையினை அறவிட்டு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மாற்றுவதற்கு வேலைத் திட்டம் தவறியிருந்தது.

(இ) 3 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய ஒப்பந்தக்காரர்களின் மேற்கூறியவாறான பலவீனமான செயலாற்றல் இருக்கையில் செயற்றிட்டத்தினால் ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்கான முறையான கணிப்பாய்வு இன்றி கால நீடிப்பினை வழங்கியிருந்தது. இந்த கால நீடிப்பினை விஞ்சி இருக்கையில் ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனை 8.7 இன் பிரகாரம் வேலை நிறைவுறுத்தலின் தாமதத்தின் அடிப்படையில் ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் (liquidity damages) அறவிடுவதற்கு வேலைத் திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3.3 இலங்கையின் முழு வீதி கட்டமைப்பினுள் இந்த வீதி வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட வீதிகள்

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கையின் வீதி ஒழுங்கமைப்பினுள் உள்ள வீதிகளில் 3,100 கிலோ மீற்றர் கிராம வீதிகள் மற்றும் 400 கிலோ மீற்றர் தேசிய வீதிகளைப் புனரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 2,086.41 கிலோ மீற்றர் தூரத்தினைக் கொண்ட 508 கிராம வீதிகள் மட்டுமே புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 3.3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்துகையில் அதனுடன் தொடர்புடைய தரப்பினரால் ஏற்பட்டிருந்த குறைபாடுகளினால் பின்வரும் பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றிருந்தன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தொகையினை உற்பத்தித் திறனுடன் நிதித் திட்டமிடலுக்கு அமைவாகப் பயன்படுத்தப்படாததால் வேலைத் திட்டத்திற்கு 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் பயன்படுத்தப்படாத கடன் மீதியின் அடிப்படையில் ரூபா 1,180.44 மில்லியன் பிணை கட்டணமாக (Commitment charges) செலுத்த வேண்டி இருந்தது.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனைகளின் 4.2 உப பிரிவிற்கமைய, ஒப்பந்தப் பொதியின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைக்கான ஆவணங்களைத் தயாரிதிதல் மற்றும் வங்கிக் கட்டணம் போன்ற மொத்த செலவுகள் ஒப்பந்தக்காரர் தாமே செலவிட வேண்டியவை ஆகும். அவ்வாறு இருக்கையில், அந்தத் தேவைப்பாட்டிற்கு முரணாக வேலைத் திட்டத்தினால் வழங்கப்பட்ட 42 ஒப்பந்தப் பொதிகளுக்கான வேலை அளவிடைப் பத்திரத்தில் உருப்படி ஒன்றினை உட்புகுத்தி இருந்ததால் ஒப்பந்தக்காரருக்கு செயலாற்றல் பிணையின் அடிப்படையில் குறித்த மொத்த செலவினை மேற்கொள்ளுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 608.50 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. மேலும், அனுமதி பெற்ற வணிக வங்கிகளில் கிடைத்த தகவல்களின் பிரகாரம் இது தொடர்பிலான உண்மையான மொத்த செலவு ரூபா 268.70 மில்லியன் மட்டுமே ஆகும். வேலைத் திட்டத்தின் கொள்முதல் நிபுணர் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை மனு மதிப்பிடும் சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதால் ரூபா 877.20 மில்லியனான இத்தகைய மேலதிக செலவினை மேற்கொள்ள வேண்டி இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) வீதி புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரருக்கு ரூபா 12,656 மில்லியன் தொகையினை வேலை ஆரம்பித்தல் முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் ரூபா 3,522 மில்லியன் தொகையினை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு செயற்றிட்டம் தவறியிருந்தது.

(ஈ) பொது ஒப்பந்த நிபந்தனையின் 4.17 ஆம் பிரிவு மற்றும் அரச கொள்முதல் வழிகாட்டல் நூலின் 5.4.4 இன் பிரகாரம் வேலை ஆரம்பித்தல் முற்பணத்

தொகையினை வழங்குகையில் அந்தத் தொகைக்கு ஈடாக வேலை ஆரம்பித்தல் முற்பணப் பிணை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், கேகாலை மாவட்டத்தில் வீதி புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 334.5 மில்லியன் தொகை வேலை ஆரம்பித்தல் முற்பணமாகச் செலுத்தியிருந்த போதிலும் ரூபா 304.2 மில்லியன் முற்பண பிணையே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(உ) வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தின் பொதி இலக்கம் KU 03, KU 05 மற்றும் புத்தளம் மாவட்டத்தின் பொதி இலக்கம் PU 01 இன் கீழ் கிராம வீதி நடவடிக்கைக்காக சீன தனியார் நிறுவனத்திடம் 2016 ஜுன் மாதம் 27 ஆம் திகதி முறையே ரூபா 1,977 மில்லியனுக்கு, ரூபா 1,997 மில்லியனுக்குமற்றும் ரூபா 1,706 மில்லியனுக்கு ஒப்பந்தப் பொதிகள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு வழங்கப்பட்ட ஒப்பற்தக்காரரின் பலவீனமான செயலாற்றல்யின் அடிப்படையில ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனை 15.2 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2019 பெப்ரவரி 12 ஆம் திகதி ஒப்பந்தப் பொதிகள் KU 03 மற்றும் KU 05 முடிவுறுத்தப்பட்டிருந்தன. இங்கு ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்தம் வழங்கப்பட்டு 28 நாட்களுக்குள் பெற்றுக் கொடுக்கப்பட்ட செயலாற்றல் பிணை மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பணப் பிணையினை பணமாக்குவதற்காக குறித்த வணிக வங்கியிடம் 2019 பெப்ரவரி 13 ஆம் திகதி அனுப்பப்பட்டு இருந்தது. இங்கு குறித்த வணிக வங்கியினால் இந்தப் பிணை பணமாக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அவ்வாறு பணமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மேலும், அந்தப் பிணையினை பணமாக்குவதற்கு எதிராக ஒருங்கிணைந்த முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் தெற்கு, சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் கிராம வீதி புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வேறு உள்நாட்டு தனியார் நிறுவனத்தினால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.இவ்வாறு, மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு உரிய தரப்பினர் அல்லாத அல்லது ஒப்பந்தத்திற்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட தரப்பினர் அல்லாத அந்த உள்நாட்டுத் தனியார் நிறுவனம் தலையிடுவதன் அவசியம் கணக்காய்விற்கு சிக்கலாக உள்ளது. அதற்கமைய, சீன தனியார் நிறுவனத்தின் பெயரில் இந்தப் பொதியின் நடவடிக்கைகளை செயற்படுத்தி இருப்பது உள்நாட்டு தனியார் நிறுவனமா என்பது சிக்கலாகவே உள்ளது.

(v) குருணாகல் மாவட்டத்தின் பொதி இலக்கம் KU 03 மற்றும் KU 05 இற்கு பிணை மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பணப் பிணையின் பெறுமதி முறையே ரூபா 389 மில்லியன் மற்றும் ரூபா 604 மில்லியனையும்

பணமாக்ககுவதற்காக 2019 பெப்ரவரி 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்றிட்டத்தின் மூலம் பல தடவைகள் நினைவூட்டல் செய்யப்பட்ட போதிலும் 2019 திசெம்பர் 03 ஆம் திகதி வரையிலும் குறித்த வணிக வங்கியிடமிருந்து பதில் தெரிவித்தோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு தெரிவித்தோ அனுப்பப்படவில்லை. இவ்வாறு கேட்டவிடத்து பணமாக்கக் கூடிய நிபந்தனையின்றி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வேலை ஆரம்பித்தல் முற்பணப் பிணை மற்றும் செயலாற்றல்ப் பிணையினை பணமாக்காது இருந்ததற்காக வணிக வங்கிக்கு எதிராக எதுவித சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஒப்பந்தத்திற்கான ஒப்பந்த நிபந்தனையின் உப பிரிவு 14.2 இன் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியின் 20 சதவீதமான ஆரம்ப முற்பணப் பெறுமதி மூன்று சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய மூன்றாவது சந்தர்ப்பத்தில் ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதமான மீதி ஆரம்ப முற்பணப் பெறுமதி ஒப்பந்தக்காரர் வேலைத் தளத்தில் முழுமையாக நிலைபெற்ற (fully mobilized) பின்னர் மற்றும் அது வரையிலும் ஒப்பந்தக்காரர் தமது வேலைத் திட்டத்திற்கு அமைவாக வேலை ஆரம்பிக்கப்பட்டு பொறியியலாளர் திருப்தியடைந்த சந்தர்ப்பத்தில் விடுவிக்க முடியும், எனினும், PU02 பொதியின் மூலம் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 11 வீதிகளில் 5 வீதிகளின் வேலைகள் (18.13 கிலோ மீற்றர்) ஆரம்பித்தல் அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அது வரையிலுமான பொதியின் பௌதிக முன்னேற்றம் 51 சதவீதத்தில் உண்மையான முன்னேற்றம் 18 சதவீதம் மட்டுமாக இருக்கையில் மூன்றாவது முற்பணத் தொகையான ரூபா 55 மில்லியன் பெறுமதி 2017 ஒக்டோபர் மாதம் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 5 வீதிகளின் (45.5 சதவீதம்) வேலை ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படாத மற்றும் ஆரம்பிக்கப்பட்டிருந்த 6 வீதிகளின் முன்னேற்றம் மிகக் குறைந்த தரத்தில் இருக்கையில் மூன்றாவது முற்பணத் தொகையினை விடுவித்திருத்தல் கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக அவதானிக்கப்பட்டது. மேலும், PU 02 பொதிக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ஆரம்ப முற்பணப் பெறுமதியான ரூபா 220 மில்லியன் பெறுமதியில் 2019 திசெம்பர் மாதம் வரையிலும் இடைக்கால கொடுப்பனவு பணவுறுதிப்பத்திர இலக்கம் 26 வரையிலும் அறவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 42 மில்லியன் மட்டுமே ஆகும்.

(ஐ) வேலைத் திட்டத்தின் வீதிப் பொதி இலக்கம் KU 01, KU 02, KU 03 மற்றும் KU 05 இற்கான ஒப்பந்த உடன்படிக்கை அளவிடைப் பத்திரத்திற்கமைய

ஒப்பந்தக்காரரின் திட்டத்திற்காகத் தொழில் இழப்பீட்டுக் காப்புறுதியினைப் பெற்றுக் கொடுத்தல், முற்பணம் வழங்குவதற்காக வங்கி பிணையினைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒரே தடவையில் செலுத்தும் (Lump sum) முறையினைப் பயன்படுத்தி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமதியாக ரூபா 61.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், மேலே குறிப்பிடப்பட்ட பொதிகளுக்கு உரிய நீடிப்பு செய்யப்பட்ட காலத்திற்காக மாற்றமடையும் கட்டளைகளைக் கொண்டு அந்த உருப்படிக்காக ரூபா 4.7 மில்லியன் பின்னர் செலுத்தப்பட்டு இருந்தது. விபரங்கள்பின்வருமாறு ஆகும்.

| பொதி | மாறுபடும் கட்டளை இலக்கம் | விபரம் | ஆரம்ப கொடுப்பனவு ரூபா | மாறுபடும் கட்டளையின் அடிப்படையில் செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| KU 01 | Vo – 37 | ஒப்பந்தக்காரரின் திட்டத்திற்காக தொழில் இழப்பீட்டுக் காப்புறுதி வழங்குதல். | 353,108 | 56,319 |
| | Vo – 38 | வேலை ஆரம்பித்தல் முற்பணக் கொடுப்பனவிற்காக வங்கி பிணை வழங்குதல். | 8,252,780 | 517,242 |
| KU 02 | Vo – 34 | ஒப்பந்தக்காரரின் திட்டத்திற்காக தொழில் இழப்பீட்டுக் காப்புறுதி வழங்குதல். | 1,000,000 | 34,150 |
| KU 03 | Vo – 10 | வேலை ஆரம்பித்தல் முற்பணக் கொடுப்பனவிற்காக வங்கி பிணை வழங்குதல். | 25,840,500 | 2,022,181 |
| KU 05 | Vo – 07 | வேலை ஆரம்பித்தல் முற்பணக் கொடுப்பனவிற்காக வங்கி பிணை வழங்குதல். | 26,392,500 | 2,088,629 |
| | | மொத்தம் | 61,838,888 | 4,718,521 |

### 3.3.5 சமூகப் பொருளாதார பெறுபேறுகள்

வடமேல் மாகாணத்தின் கீழ் குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களை உள்ளடக்கி குருணாகல் மாவட்டத்தில் பரந்துள்ள KU1, KU3, KU4 மற்றும் KU5 பொதிகளினதும், புத்தளம் மாவட்டத்தில் பரந்துள்ள PU1, PU2 மற்றும் PU3 பொதிகளினதும் கீழுள்ள 18 வீதிப் பகுதிகளை உள்ளடக்கி 2019 நவம்பர் 26, 27, 28 மற்றும் 29 ஆம் திகதிக்குட்பட்டகாலத்தினுள் குறித்த பொறியியலாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைத் தள பரீட்சிப்பின் போது பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

#### 3.3.5.1வாகனம் செலுத்தக் கூடிய வேகம் மற்றும் சாலை விபத்துகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட வினாக் கொத்துக்கு கிராம மக்கள் வழங்கிய பதில்களுக்கமைய வீதி தரமானதாக அமைக்கப்பட்ட போதிலும் இந்த வீதி திருத்தம் செய்யப்பட்டதனால் அதிக வேகத்தில் வாகனங்களைச் செலுத்தும் காரணத்தாலும் மற்றும் புனரமைப்பு செய்யப்பட்ட வீதியில் 3 மீற்றர் அளவிற்கு அகலம் போதுமானதாக இல்லாத காரணத்தால் வீதியைப் பயன்படுத்துவோரிடையே வாகன விபத்து ஏற்படுவதில் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது என அப்பிரதேச மக்களிடையே மாதிரி அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) ஒப்பந்தப் பெறுமதி ரூபா 4,765.4 மில்லியனான KU 04, PU 02 மற்றும் PU 03 ஆகிய ஒப்பந்தப் பொதிகளின் வேலைப் பகுதிகள் இது வரையிலும் நிறைவு செய்யப்படாத காரணத்தினாலும் மற்றும் வீதி தரமற்று இருந்ததாலும் வீதியினைப் பயன்னடுத்தும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பு மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தங்களுள் 03 வீதிகளுக்குரிய அவ்வாறான மிகவும் ஆபத்தான இடங்கள் பலவற்றை அறிந்து கொள்ளக் கூடியதா உள்ளதுடன் அதன் மூலம் ஏற்படக் கூடிய உயிர்ச் சேதம் மற்றும் சொத்து சேதம் மூலம் சமூக சிக்கல்கள் உருவாகக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

| பொதி | வீதி இலக்கம் | வீதியின் பெயர் | இடம் கிலோ மீற்றர் | புகைப்படங்கள் |
|---|---|---|---|---|
| KU-04 | 28 | குருணாகல், புத்தளம், குனுகெட்டிய சந்தி தொடக்கம் மல்பானவ ஊடாக ரஸ்னாயகபுர | 0+960- 1+000 |   |
| KU-04 | 28 | குருணாகல், புத்தளம், குனுகெட்டிய சந்தி தொடக்கம் மல்பானவ ஊடாக ரஸ்னாயகபுர | |  |
| KU-04 | 08 | கிரிபாவ வராவெவ தொடக்கம் ஹதகல வீதி | 2+200 |  |
| KU- 04 | 91 | பளுவ வீதி சந்தி தொடக்கம் கிரிபாவ ஊடாக கும்புக்கடவல | 3+100 |  |

| | | | | |
|---|---|---|---|---|
| KU- 04 | 91 | பளுவ வீதி சந்தி தொடக்கம் கிரிபாவ ஊடாக கும்புக்கடவல | 6+000-6+200 |  |
| KU - 04 | 91 | பளுவ வீதி சந்தி தொடக்கம் கிரிபாவ ஊடாக கும்புக்கடவல | |  |

### 3.3.5.2பிராந்திய மற்றும் வலய அபிவிருத்தி

குருணாகல் மாவட்டத்தின் KU01 பொதிக்கு உரியதாக செய்யப்பட்ட 3 கிராம வீதிகளில் உள்ள தெருக்களைப் பயன்படுத்துவோரிடையே 15 பேரினால் கேள்விக் கொத்திற்கு வழங்கப்பட்டிருந்த பதில்களின் மூலம் தெளிவுறும் வகையில் இந்த வேலைத் திட்டத்தினூடாக சரியான தரத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வீதியினூடாக கீழே குறிப்பிடப்பட்டவாறு கிராம மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்துவதில் தாக்கம் செலுத்தி உள்ளது. அதாவது,

- போக்குவரத்திற்காக செலவிடப்படும் காலம் குறைதல்,
- வாகனங்களின் எரிபொருள் பாவனை குறைவடைதல்,
- வாகன பராமரிப்பு செலவு குறைவடைதல்,
- பிரதான வீதிகளுக்குள் நுழைதல் இலகுவாதல்,

- வீதி புனரமைப்பின் பின்னர் பொது போக்குவரத்து சேவைகள் ஆரம்பித்தலினால் அதனோடு தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல்,
- தமது காணிகளுக்கான சந்தைப் பெறுமதி அதிகரித்தல்,
- விவசாயப் பயிர்களைச் சந்தைகளுக்கு வினைத்திறனுடன் வழங்குவதற்கு, மற்றும்
- அவர்களின் நாளாந்த நடவடிக்கைகளை மிக வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளது என்பதாகும்.

மேலும், இந்த வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்துவதன் மூலம் பிரதேசத்தின் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் உருவாகி மக்களின் வாழ்க்கை மிகச் சிறந்த மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு பங்களிப்பு செய்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3.5.3 சுற்றுச் சூழல் தாக்கம்

(அ) ஒப்பந்தக்காரரினால் வீதி புனரமைப்பு வேலைகள் சரியான முறையில் நிறைவு செய்யப்படாது ஒப்பந்த உடன்படிக்கை மீறப்பட்ட குருணாகல் மாவட்ட ஒப்பந்தப் பொதிகள் KU04 மற்றும் KU05 மற்றும் புத்தளம் மாவட்டதின் PU 02 மற்றும் PU03 பொதிகளுக்குரியதாக வழங்கப்பட்ட 20 கேள்விக் கொத்திற்கு பிரதேச வாழ் மக்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட பதில்களுக்கமைய தெளிவாவது, வீதியினை அபிவிருத்தி செய்து இடை நடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தால் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலையில் அதாவது மழை காலங்களில் சேறாதல், வெயில் காலங்களில் தூசிகளால் நிரம்புதல் போன்றனவும், மதகுகள் சரியான முறையில் புனரமைப்பு செய்யப்பட்டு முடிக்காத காரணத்தால் பாதுகாப்பற்று இருப்பதால் வீதி விபத்துக்கள் அதிகரித்தல் மற்றும் சரியான முறையில் அமைக்கப்படாத வடிகால்களில் மழை நீர் தேங்கி டெங்கு பரவும் நிலை உருவாகும் ஆபத்து போன்று வீதியைப் பயன்படுத்துவோரும் அதிக சிரமங்களுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதாகும். அதற்கமைய 3 வீதிகளை புகைப்படங்கள் மூலம் கீழே உள்ளவாறு விபரிக்க முடியும்.




(PU-03வீதி இலக்கம் 17 பாதுராவ (PU-03வீதி இலக்கம் 38 திக்வெல வீதி) ஊடாக சதனன்கம கடுவகொட வீதி
இடம்- 1+010)



(KU-04வீதி இலக்கம் 28 குனுகெட்டிய சந்தி தொடக்கம் மல்பனாவ ஊடாக ரஸ்னாயகபுர )

(ஆ) மேலும், ABC கலவையினை இட்டு வீதித் தளம் அமைக்கப்பட்டு அதன் பின்னர் வேலை நிறுத்தப்பட்டிருந்த வீதிகளிலிருந்து வரும் தூசிகளினால் ஏற்படும் வளி மாசடைதல் மற்றும் சூழவுள்ள வீடுகளில் வசிக்கும் மக்களின் சுகாதாரத்திற்கு ஏற்படும் பாரிய தாக்கங்கள். அதற்குரிய புகைப்படங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.



(PU-03வீதி இலக்கம் 38 திக்வெல வீதி, இடம் - 1+590)



(KU-05 வீதி இலக்கம் 26 பாதெனிய, இடம் - 0+350 – 2+200)



(KU-04வீதி இலக்கம் 28 குருணாகல் புத்தளம், குனுகெட்டிய சந்தி தொடக்கம் மல்பனாவ ஊடாக ரஸ்னாயகபுர இடம் - 0+960- 1+360)

(இ) பகுதியளவில் நிறைவு செய்யப்பட்ட கட்டுமானங்கள் காரணமாக வீதியின் இரு மருங்கிலுமுள்ள வீடுகளுக்கு மற்றும் வியாபார நிலையங்களுக்கு நுழைவதற்குள்ள அசௌகரியங்களினால் பிரதேச வாழ் மக்களின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு தீங்கான பாதிப்பு ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் பல மாதிரி பரீட்சிப்பின் போது வெளிப்பட்டன. புகைப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



(KU-04வீதி இலக்கம் 91 பளுவ வீதி சந்தி தொடக்கம் கிரிபாவ ஊடாக கும்புக்கடவல இடம் - 3+080- 3+230)



(KU-04 வீதி இலக்கம் 91 பளுவ வீதி சந்தி தொடக்கம் கிரிபாவ ஊடாக கும்புக்கடவல இடம் - 3+100)

(ஈ) ஒப்பந்தக்காரர்களின் இயந்திரங்கள் வேலைத் தளம் மற்றும் பிரதேச மக்களின் வீடுகளில் நிறுத்தப்பட்டு இருப்பதனால் கிராம மக்களின் நாளாந்த நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.






(KU-04வீதி இலக்கம் 08 கிரிபாவ வராவெவ தொடக்கம் சந்தகல வீதி வரை)




(PU-03வீதி இலக்கம் 38 திக்வெல வீதி)

### 3.4 பரிந்துரை

பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. நிர்மாணம் மற்றும் ஆலோசனை ஒப்பந்தம் வழங்குகையில் மற்றும் செயற்படுத்தப்படுகையில், வேலைத் திட்ட அடிப்படையில் திட்டமிடப்பட்ட கிராம மற்றும் தேசிய வீதிகளின் தூரங்களை ஊகித்துக் கொள்ளுவதன் மூலம் கிராம வீதிகளைப் போன்றே தேசிய வீதிகளையும் உச்ச அளவில் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (தொடர்பு 3.1.1)

2. வேலைத் திட்டத்திற்காகக் கிடைக்கும் நிதியினை வினைத் திறன் மற்றும் உற்பத்தித் திறனுடனும் குறித்த வீதி புனரமைப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக முறையான உள்ளக நிதித் திட்டமொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். (தொடர்பு 3.1.2)

3. கட்டங்களாகப் பெற்றுக் கொள்ளப்படும் கடன் தொகைகளில் பயன்படுத்தப்படும் கடன் உடன்படிக்கைகளின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை அறிந்து கொள்ளுவதற்கு முறைமையொன்றினை தயாரித்தல் வேண்டும். (தொடர்பு 3.1.2)

4. புனரமைப்பு செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் வீதிகளைத் திட்டமிடுகையில் வேறு செயற்றிட்டங்கள் அல்லது வேலைத் திட்டங்களின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதா அல்லது புனரமைப்பு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பின்னரே ஒப்பந்தம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். (தொடர்பு 3.2.1)

5. நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தை வழங்கியதன் பின்னர், வேறு செயற்றிட்டங்களின் மூலம் புனரமைப்பு செய்யப்பட்ட வீதிப் பகுதிகளை அறிந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு வேறு செயற்றிட்டங்களின் ஊடாக நிறைவு செய்தல் காரணமாக வழங்கப்பட்ட செயற்றிட்டத்தின் மொத்த செலவினைத் திருத்துதல் மற்றும் அந்த நிதி ஒதுக்கீடு மூலம் வேறு வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான முறைமைகள் தயாரிக்கப்படல் வேண்டும். (தொடர்பு 3.2.1)

6. 2006 ஆம் ஆண்டு கொள்முதல் வழிகாட்டல் நூல் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல் நூல் என்பவற்றுக்கு அமைவாக ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (தொடர்பு 3.2.2)

7. ஒப்பந்தம் வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களினது தகைமைகளைக் கவனத்திற் கொள்ளுகையில் அவர்களது கடந்த கால அனுபவங்களைப் போன்றே நிதி

ரீதியான இயலுமை தொடர்பான பகுப்பாய்வு ரீதியான ஆய்வினை மேற்கொள்ளல் வேண்டும். (தொடர்பு 3.2.2)

8. கைவிடப்பட்ட ஒப்பந்தப் பொதிகளை நிறைவுறுத்தல் காரணமாக ஏற்பட்ட நட்டத்தினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (தொடர்பு 3.2.3)

9. கைவிடப்பட்டதனால் முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தப் பொதிகளை மீண்டும் விலை மனு கோரப்பட்டு புதிய ஒப்பந்தக்காரருக்கு வழங்குவதன் மூலம் வேலைத் திட்டத்தின் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (தொடர்பு 3.2.3)

10. மெதுவாக செயற்படுத்தப்படும் ஒப்பந்தப் பொதிகள் தொடர்பில் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு சரியான நேரத்தில் வீதி புனரமைப்பு வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். (தொடர்பு 3.2.4)

11. வீதி புனரமைப்பு நடவடிக்கைகள் சரியான தரத்தில் இடம் பெறுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளைத் திட்டமிடல் வேண்டும். (தொடர்பு 3.2.6)

12. வீதி புனரமைப்பு வேலைத் திட்டத்தின் ஆரம்பத் திட்டங்களுக்கு அமைய, குறித்த நேரக் கடகமைப்பினுள், முழுமையாக நிறைவு செய்து கொள்ளுவதற்குத் தேவையான திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும். (தொடர்பு 3.3.2)

13. ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாக நிர்மாண மற்றும் ஆலோசனை ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக சரியான கண்காணிப்பினை மேற்கொள்ள வேண்டும். (தொடர்பு 3.3.2. (இ) மற்றும் 3.3.4)

14. ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்புடையதாக வேலைத் திட்டத்தின் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். (தொடர்பு 3.3.4)

15. எதிர்வரும் ஒப்பந்த உடன்படிக்கைகளைத் தயாரிக்கையில் பின்னாளில் ஏற்படக் கூடிய பாதகமான நிலைமைகள் நட்டங்கள் உள்ளடங்கும் வகையில் ஒப்பந்த நிபந்தனைகள் உட்சேர்க்கப்படல் வேண்டும். (தொடர்பு 3.3.4 ஆ)

16. ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கு இணங்காத காரணத்தினால் ஏற்பட்ப நட்டங்களை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (தொடர்பு 3.3.4. இ-ஐ)

17. தேவையற்ற செலவுகளைக் குறைத்துக் கொள்ளும் வகையில் நடப்பு மற்றும் தரமான வீதி ஒழுங்கமைப்பினை உருவாக்குவதற்கு முகாமைத்துவம் கவனத்தினை செலுத்த வேண்டும். (தொடர்பு 3.2.3. இ மற்றும் 3.3.4.)

18. ஒப்பந்த நிர்மாண நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிர்மாணங்களை விரைவில் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிகளைகைகளை தொகுத்து வழங்க வேண்டும். (தொடர்பு 3.3.5.1)

19. ஒப்பந்த நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை அறிந்து கொண்டு அதன் மூலம் ஏற்படக் கூடிய சூழல் மற்றும் சமூக சிக்கல்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை தொகுத்தல் வேண்டும். (தொடர்பு 3.3.5.3)

ஒப்பம்./டபிள்யு. பி. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2022 பெப்ரவரி 03 ஆந் திகதி

**அட்டவணை 1**

## வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப் பொதிகள்

| மாவட்டம் | ஒப்பந்தப் பொதிகள் | வீதிகளின் அளவு நீளம் கிலோ மீற்றர் | ஒப்பந்தப் பொதிகள் பெறுமதி ரூபா மில்லியன் | வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி | வேலை நிறைவு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| குருணாகல் | KU01 | 83.29 | 2,005 | 2016.08.01 | 2019.01.29 |
| குருணாகல் | KU02 | 100.47 | 2,124 | 2016.08.01 | 2019.08.23 |
| கண்டி | KA01 | 76.2 | 1,756 | 2015.12.17 | 2019.10.28 |
| கண்டி | KA02 | 72.52 | 1,923 | 2015.12.17 | 2019.11.28 |
| கண்டி | KA03 | 73.95 | 2,096 | 2015.12.17 | 2019.11.22 |
| மாத்தளை | MA02 | 57 | 1,248 | 2015.12.17 | 2018.01.08 |
| மாத்தளை | MA03 | 61.03 | 1,407 | 2015.12.17 | 2019.02.05 |
| நுவரெலியா | NE02 | 36.27 | 1,241 | 2015.12.17 | 2019.02.12 |
| காலி | G02 | 61.80 | 1,483 | 2015.05.18 | 2018.05.31 |
| காலி | G03 | 73.13 | 1,733 | 2015.05.18 | 2018.06.30 |
| மாத்தறை | M01 | 98.12 | 2,315 | 2015.05.18 | 2018.07.31 |
| மாத்தறை | M02 | 66.03 | 1,803 | 2015.05.18 | 2019.10.29 |
| மாத்தறை | M03 | 53.46 | 1,207 | 2015.05.18 | 2018.05.31 |
| அம்பாந்தோட்டை | H01 | 67.10 | 1,583 | 2015.05.18 | 2018.07.31 |
| அம்பாந்தோட்டை | H02 | 58 | 1,803 | 2015.05.18 | 2017.12.30 |
| அம்பாந்தோட்டை | H03 | 42 | 1,207 | 2015.05.18 | 2017.09.30 |
| அநுராதபுரம் | AP01 | 85.39 | 1,656 | 2016.08.01 | 2019.04.19 |
| அநுராதபுரம் | AP02 | 76.85 | 1,824 | 2016.08.01 | 2019.01.31 |
| அநுராதபுரம் | AP03 | 82.66 | 1,492 | 2016.08.01 | 2019.04.30 |
| அநுராதபுரம் | AP04 | 90.20 | 1,635 | 2016.08.01 | 2019.02.25 |
| பொலநறுவை | PO1 | 50.76 | 1,158 | 2016.08.01 | 2018.10.02 |
| பொலநறுவை | PO2 | 73.36 | 1,483 | 2016.08.01 | 2018.12.23 |
| பொலநறுவை | PO3 | 49.55 | 1,249 | 2016.08.01 | 2018.10.31 |
| இரத்தினபுரி | R03 | 81.01 | 2,020 | 2015.12.16 | 2018.09.27 |
| களுத்துறை | KL01 | 87.33 | 1,912 | 2016.08.28 | 2019.11.04 |

அட்டவணை 2

## வடமேல் மாகாணத்தில் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தப் பொதிகள்

| ஒப்பந்தப் பொதிகள் | வீதியின் அளவு | நீளம் கிலோ மீற்றர் | ஒப்பந்தக்காரர் | உடன்படிக்கை பெறுமதி ரூபா மில்லியன் | பௌதிக முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 எதிர்பார்ப்பு % | பௌதிக முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 உண்மை % | வேலை முடிவுறுத்தப்பட்ட திகதியில் பெறுமதி ரூபா மில்லியன் | செலுத்தப்பட்டிருந்த மொத்த பெறுமதி ரூபா மில்லியன் | நிறுத்தல் கட்டளை திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| KU 03 | 12 | 91.85 | ரன்கென் ரெயில்வே நிர்மாணகூட்டு வியாபார (தனியார்) நிறுவனம் | 1,976.7 | 64.78 | 47.97 | 912.3 | 909.9 | 2019.02.12 |
| KU 04 | 12 | 106.02 | வீ. வீ.கருணாரத்ன நிறுவனம் | 2,091.2 | 44.53 | 41.32 | தயாரிக்கப்படவில்லை | 1,048.6 | 2019.11.13 |
| KU 05 | 17 | 100.85 | ரன்கென் ரெயில்வே நிர்மாணகூட்டு வியாபார (தனியார்) நிறுவனம் | 1,996.6 | 59.13 | 37.45 | 836.3 | 835.6 | 2019.02.12 |
| PU 02 | 11 | 74.08 | வீ. வீ.கருணாரத்ன நிறுவனம் | 1,463.9 | 50.90 | 38.92 | தயாரிக்கப்படவில்லை | 730.2 | 2019.07.19 |
| PU 03 | 16 | 48.37 | வீ. வீ.கருணாரத்ன நிறுவனம் | 1,210.3 | 84.29 | 49.20 | தயாரிக்கப்படவில்லை | 585.8 | 2019.11.13 |
| **மொத்தம்** | **68** | **421.17** | | **8,738.70** | | | | **4,110.10** | |

அட்டவணை 3

| விபரம் | மாறுபடும் கட்டளை இலக்கம் | பெறுமதி KU 01 ரூபா | செலுத்திய பெறுமதி KU 02 ரூபா | பெறுமதி PU 01 ரூபா |
|---|---|---|---|---|
| ------------ | ---------- | ------------- | ------------ | ----------- |
| தொழில் வழங்குனர் மற்றும் பொறியியலாளர்களின் அலுவலகம் வீடு மற்றும் பதவியணியினரின் வேதனம் மற்றும் கொடுப்பனவு | | | | |
| KU 03மற்றும் 05 | 43 | 3,540,064 | - | - |
| KU 03மற்றும் 05 | 26 | 9,813,974 | - | - |
| KU 03மற்றும் 05 | 13 | - | 7,700,742 | - |
| PU 02 | 20 | - | - | 20,424 |
| PU 02 | 22 | - | - | 415,638 |
| PU 03 | 24 | - | - | 184,752 |
| KU 04 | 17 | - | - | 3,120 |
| KU 04 | 19 | - | - | 547,812 |
| **மொத்தம்** | | 13,354,038 | 7,700,742 | 1,171,746 |
| தொழில் வழங்குனர் மற்றும் பொறியியலாளரின் வாகன வசதிகள் வழங்குதல் | | | | |
| KU 03மற்றும் 05 | 16 | - | 649,400 | - |
| PU 02 | 21 | - | - | 173,130 |
| PU 03 | 23 | - | - | 105,940 |
| KU 04 | 18 | - | - | 229,212 |
| **மொத்தம்** | | - | 649,400 | 508,282 |
| **கூட்டு மொத்தம்** | | 13,354,038 | 8,350,142 | 1,680,028 |